# அண்ணா அறிவாலயம் To லண்டன் அறிவாலயம்!

## கேம்பிரிட்ஜ் – ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி!



இது 'பயணக் கட்டுரை' அல்ல! 'பயனர் கட்டுரை'. ஆம்! அண்ணாவின் அறிவாலயத்தில் பயின்ற நான், 'திராவிட மாடல்' எனும் கருத்தியல், எல்லோருக்குமான கல்வி வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள பங்களிப்பை எடுத்துச் சொல்ல உலகளவில் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களுக்குப் பயணப்பட்டேன். பயன்பெற்றேன்!

எனது அரசியல் ஆசான் முதலமைச்சர் அவர்களிடம் 'கேம்பிரிட்ஜ் மற்றும் ஆக்ஸ்போர்டு மாணவர்களைச் சந்தித்து, பல்கலைக்கழகம் சார்பில் கொடுத்துள்ள **The Dravidian Model and Education: Achievements and Challenges** எனும் தலைப்பில் உரையாடவுள்ளேன்' என்றவுடன், 'உரை நிகழ்த்துவதை விட கலந்துரையாடுவதே உனது நோக்கமாக இருக்க வேண்டும்' என அறிவுறுத்தினார். அவரின் வாழ்த்துகளோடும், கழக ஆட்சியில் பள்ளிக் கல்வித்துறை நிகழ்த்தி வரும் சாதனைகளை விளக்கும் நூல் தொகுப்புகள் மற்றும் மாநிலக் கல்விக் கொள்கை2025 பிரதிகளோடும் இங்கிலாந்து நோக்கி பயணப்பட்டேன்.

அங்குள்ள கழக உடன்பிறப்புகளும், லண்டன் வாழ் தமிழ்ச் சொந்தங்களும் அன்போடு வரவேற்றார்கள். வரவேற்றதோடு மட்டுமல்லாமல் ஒருங்கிணைந்த பிரிட்டன் தமிழ்ச் சங்கம் சார்பாக 'காஃபி வித் அன்பில்' எனும் கலந்துரையாடல் நிகழ்வுக்கும் அழைத்துச் சென்றார்கள். அங்கு நான் மட்டும் அமரும் படியான சிறிய மேடை அமைத்திருந்தார்கள். அதை நான் எதிர்பார்க்கவில்லை! 'ஏன் எனக்கு மட்டும் தனி இருக்கை?' என ஏற்



பாட்டாளர்களை அன்போடு கடிந்துகொண்டு, நிகழ்வில் பங்கேற்றேன். கலந்துரையாடல் என்றுதான் சொன்னார்கள்; ஆனால் அங்கே நடந்தது கிட்டத்தட்ட நேர்காணல்! தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வித்துறையின் சார்பாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும், அரசுப்பள்ளி மாணவர்களின் வளர்ச்சி குறித்தும் ஆர்வத்துடன் கேட்டார்கள். அதோடு எனது குடும்பம், எனது இளமை பருவம் குறித்தும் அவர்களோடு பகிர்ந்துகொள்ளும் சூழல் அமைந்தது. அங்கே நான் சந்தித்த இரு மாணவர்கள் எனது பயணத்தைத் தொடக்கத்திலேயே அர்த்தமுள்ளதாக்கினார்கள். மாணவர்கள் குருஷியா ஜெயராமன் மற்றும் ஆகாஷ் ஆகியோர் அயலகம் வந்து உயர்கல்வி கற்பது பற்றி பகிர்ந்த அனுபவங்கள் நமது 'திராவிட மாடல்' அரசின் சாதனைகளை பறைசாற்றியது.

முதலமைச்சர் அவர்களின் 'அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டம்' மூலம் பயனடைந்த அந்த இரு மாணவர்களும் 'மிகவும் ஏழ்மையான குடும்பப் பின்னணியை கொண்ட நாங்கள், இன்றைக்கு லண்டன் வந்து உயர் கல்வி பயில்கிறோம். இப்படியெல்லாம் வாய்ப்பு கிடைக்கும் என நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. இதற்கு காரணமான நம் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி' என்று கூறி நெகிழ்ந்தார்கள்.

நமது மாணவச் செல்வங்களைச் சந்தித்து உரையாடிய மகிழ்ச்சியோடு கேம்பிரிட்ஜ் மாணவர்களையும் சந்தித்தேன். கேம்பிரிட்ஜ் தெற்காசிய மன்றத்தில் **'The Dravidian Model and Educa tion: Achie vements and Challenges'** எனும் தலைப்பில் உரையாற்றினேன்.

"தமிழ்நாட்டின் பள்ளிக் கல்வித்துறை அமைச்சராக மட்டுமல்ல, 'திராவிட மாடல்' கல்வித் திட்டங்களின் மூலம் லட்சோபலட்ச மாணவர்களின் வாழ்க்கையை மாற்றியமைத்து, நம்முடைய அரசுப் பள்ளிகளைப் பெருமையின் அடையாளமாக மாற்றிய சாதனைகளையும் சவால்களையும் அருகிலிருந்து பார்த்தவனாக இந்த அரங்கில் நான் நிற்கிறேன்" என்றுதான் எனது உரையைத் தொடங்கினேன். நீதிக்கட்சியின் புரட்சிகள், தந்தை பெரியார் கற்றுக்கொடுத்த திராவிடக் கருத்தியலைப் பின்பற்றி நமது 'திராவிட மாடல்' அரசு செய்துவரும் கல்வி வளர்ச்சிக்கான திட்டங்கள் குறித்து உரையாற்றினேன். அதைக்கேட்டு அங்கிருந்த மாணவர்கள் சிலர் நமது சமூகநீதி வரலாற்றை மென்மேலும் தெரிந்து கொள்ள தங்களது ஆர்வத்தை வெளிப்படுத்தினார்கள்.

அதே பல்கலைக்கழகத்தில் இயங்கும் மொழி யியல் துறையின் இணை இயக்குநர் திருமிகு. Ianthi Maria Tsimpli அவர்களிடம், பல்லாயிரம் ஆண்டுகள் வரலாறு கொண்ட நமது தமிழ் பண்பாட்டின் தொன்மையை உரைக்கும் **"Porunai-River Civiliza tion, ANTIQUITY OF IRON, Indus Signs and Graffiti Marks of Tamil Nadu, Mayiladum parai-Beginning of Agrarian Society 4200 Years Old Iron Age Culture in Tamilnadu"** ஆகிய நான்கு நூல்களை வழங்கினேன். பேராசிரியர் திருமிகு. **Shailaja Fennell** அவர்களிடம் 234/77 ஆய்வுப்பயணம் சார்ந்த நூலையும், பள்ளிக் கல்வித்துறை சாதனைகள் அடங்கிய நூல்களை யும், மாநிலக் கல்விக் கொள்கை2025 ஆகிய நூல்களையும் வழங்கி னோம். இந்த நூல்கள் அத்துறைகளின் நூலகங்களில் தற்போது இடம் பெற்றுள்ளன.

**Dr.Kevin Greenbank** அவர்கள் அம்மையத்தில் அமைந்துள்ள நூலகத்தின் அன்பான வழிகாட்டியாக அமைந்தார். அங்கு சேமிக்கப்பட்டிருந்த தொல்பொருள்கள் சொல்லும் வரலாறு பற்றி எடுத்துரைத்தார். இந்திய ஒன்றியத்தின் குடியரசுத் தலைவர் மாளிகையை வடிவமைத்தவர்களில் ஒருவரான கட்டடக் கலை வல்லுநர் எட்வின் லுட்யென்ஸ் அவர்கள் இங்கிலாந்தில் இருந்த போதும், கட்டுமானப் பணிகளை மேற்பார்வையிட்டுள்ளார். அப்போது அவருக்கு இந்தியாவில் இருந்து அனுப்பப்பட்ட குடியரசுத் தலைவர் மாளிகை கட்டுமானத்தின் கழுகுப்பார்வைப் படங்கள் நூலகத்தில் இடம்பெற்றிருந்தன. அதன் சிறப்புகளையும் சொல்லி, சக நண்பரைபோல அன்புகாட்டி, நூலகத்தை சுற்றிக்காண்பித்தார் **Dr.Kevin Greenbank** அவர்கள்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக மாணவர்களிடமும், பேராசிரியர்களிடமும் விடை பெற்றுகொண்டு, அண்ணல் அம்பேத்கர் தங்கி கல்வி பயின்ற இல்லத்திற்குச் சென்றோம். அவ்விடம் ஏன் இவ்வளவு சிறப்பு மிக்கதாக உள்ளது? இந்திய அரசியலமைப்பை உருவாக்கிய ஒருவர் இளமை காலத்தில் தங்கியிருந்த காரணத்தினாலா? ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகப் போராடிய புரட்சியாளர் ஒருவர் வசித்த காரணத்திலா? இப்படி பல




கேள்விகள் மனதில் எழுந்த அந்த நேரத்தில், கல்வியைக் காதலித்த ஒரு தலைவர் தங்கியிருந்த காரணமும் அவ்விடத்திற்கு பெருமை சேர்க்கிறது என்பதையும் மறுக்க முடியாது என நினைத்துக் கொண்டேன்.

அடுத்ததாக ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் செல்லும் கடமை இருந்தது. அங்கு செல்லும் வழியில் கம்யூனிச தத்துவத்தை உலகிற்கு அளித்து புரட்சி செய்த காரல் மார்க்ஸ் அவர்களின் நினைவிடத்திற்குச் செல்லும் ஆவல் ஏற்பட்டது. மாமேதை காரல் மார்க்ஸ் அவர்களின் நினை விடத்திற்கும் சென்றோம். உலகில் பற்பல மாற்றங்களுக்கு அடித்தளமிட்ட இந்த இணையற்ற சிந்தனையாளரின் சிலை, சென்னையில் 'திராவிட மாடல்' அரசால் விரைவில் அமைக்கப்படவுள்ளதை எண்ணி அகமகிழ்ந்தேன்.

சுயமரியாதை உணர்வூட்டி, நமது வாழ்வை திருத்தி அமைத்த தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்தை கழகத்தலைவர் முதலமைச்சர் அவர்கள், ஒரு மாதத்திற்கு முன்பு ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் உள்ள **Balliol** கல்லூரியில் திறந்து வைத்து வரலாறு படைத்தார். அப்படத்திற்கு மரியாதை செலுத்தி, மகிழ்ச்சியோடும் பெருமையோடும் ஆக்ஸ்போர்டு யூனியன் மாணவர்களைச் சந்தித்தேன்.

1823ஆம் ஆண்டு உருப்பெற்ற ஆக்ஸ்போர்டு யூனியன் பல்வேறு துறைகளில் அறிஞர்களை உருவாக்கிய பெருமையை கொண்டது. அங்கு பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சுமார் 100 மாணவர்களோடு உரையாடும் வாய்ப்பு எனக்கு அமைந்தது. அம்மாணவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் அளித்து, திராவிட மாடலின் மகத்துவம் பற்றி கூறினேன். விளையாட்டுத் துறையில் ஆர்வமுள்ள மாணவர்களும் கலந்துகொண்ட இந்த கலந்துரையாடலில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு விளையாட்டுத் துறை படைத்துவரும் சாதனைகள் பற்றி எடுத்துரைத்தேன். அதிலும் குறிப்பாக சமூகநீதியைப் பின்பற்றும் விதமாக 3 சதவிகித இடஒதுக்கீடு விளையாட்டு வீரர்களுக்கு சிறப்பான முறையில் வழங்கப்படுவதை தெரிவித்த போது, மாணவர்கள் தங்களின் வரவேற்பையும் வாழ்த்துகளையும் வெளிப்படுத்தினார்கள்.

பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள




புகழ்பெற்ற விவாத அரங்கத்தினையும் பார்வையிடும் வாய்ப்பு கிடைத்தது. ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் உள்ள இந்திய மையத்தில் மாணவர்களோடு கலந்துரையாடியபோது, நீடித்த நிலையான வளர்ச்சி பற்றிய தங்களின் பரந்துபட்ட பார்வையை வெளிப்படுத்தினார்கள். கல்வியில் 'திராவிட மாடல்' அரசு நிகழ்த்தி வரும் சாதனைகளை அவர்களிடம் எடுத்துக்கூறிய அதேநேரம், 'சமூக அமைப்பு குறித்தும், கல்வியால் ஏற்பட்டுள்ள மேம்பாடுகள் குறித்தும் ஆய்வு செய்ய விரும்பும் மாண வர்கள் தமிழ்நாட்டிற்கு அவசியம் வர வேண்டும்' என அழைப்பு விடுத்தேன்.

எல்லா தளைகளில் இருந்தும் மனித குலத்தை விடுவிப்பதற்கான ஒரே ஆயுதமாக உள்ளது கல்வி. அதை தமிழ்நாட்டின் ஒவ்வொரு குழ ந்தைக்கும் கொண்டு சேர்க்க "எல்லார்க்கும் எல்லாம்" என்ற கொள்கை வழியில் நம் முதல மைச்சர் அவர்கள் செயல்படுத்திவரும் முன்மாதிரி திட்டங்கள் தரும் முத்தாய்ப்பான விளைவுகளை உலகளாவிய அமைப்புகளில் எடுத்துரைக்க கிடைத்த வாய்ப்பே இந்த பயணம். இதில் முழுமையான மனநிறைவும், புதுமையான அனுபவங்களும் கிடைக்கப் பெற்றேன். எனவே தான், முதல் வரியில் சொன்னேன், "இது 'பயணக் கட்டுரை' அல்ல! 'பயனர் கட்டுரை'!" என்று. அனைத்தையும் சாத்தியப்படுத்திய என்னுடைய அரசியலின் "முதல் வரி" முதலமைச்சர் அவர்களுக்கு அவரின் மாணவனாக நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் –

# தீபாவளி தீக்காய சிறப்பு உள் மருத்துவப் பயனாளிகள் பிரிவு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

*சென்னை, அக். 17 -*

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள் நேற்று (16.10.2025) சென்னை அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், தீபாவளி தீக்காய சிறப்பு உள் மருத்துவ பயனாளிகள் பிரிவு தொடங்கி வைத்து, தீபாவளி பண்டிகையில் பட்டாசு வெடிக்கும் போது செய்ய கூடியவை மற்றும் செய்யக் கூடாதவை பற்றிய விழிப்புணர்வு கையேட்டினை வெளியிட்டார்.

பின்னர் அமைச்சர் மா. சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

**தீக்காய சிகிச்சை பிரிவு தொடக்கம் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்**

சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தீபாவளி சிறப்பு தீக்காய சிகிச்சை பிரிவு ஆய்வு மற்றும் தீபாவளி தீக்காய விபத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தீபாவளி பண்டிகை நெருங்கி வருவதையொட்டி பாதுகாப்புடன் பட்டாசு வெடிப்பதும், தீக்காயம் இல்லாத வகையில் தீபாவளி பண்டிகை கொண்டாட வேண்டும் என்கின்ற வகையிலும் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, காவல்துறை, தீயணைப்புத்துறை மற்றும் மாசு கட்டுப்பாட்டு வாரியம் பட்டாசு வெடிப்பதற்குரிய நேரம், பாதுகாப்பாக பட்டாசு வெடிப்பது எப்படி போன்ற பல்வேறு விழிப்புணர்வுகளை தொடர்ச்சியாக ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில் விபத்துகள் நேராத வகையில் இந்த தீபாவளி நடைபெற வேண்டும் என்று அனைவரும் கருதுகிறோம். அதையும் மீறி எங்கேயாவது தீ விபத்துகள் ஏற்பட்டால் அவர்களை பாதுகாப்பதற்குரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

அதேபோல் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகள், வட்டார மருத்துவமனைகள் ஆகிய இடங்களில் தீ விபத்திற்கான சிறப்பு வார்டுகள் உருவாக்கப்பட்டிருக்கிறது. தீ விபத்துகள் நேர்ந்தால் அதற்கு தேவையான மருந்து உபகரணங்கள், போதுமான அளவில் இருப்பு உறுதி செய்யப்பட்டிருக்கிறது. அந்த வகையில் சென்னையில் இன்று கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தீபாவளி தீக்காய சிறப்பு பிரிவில் 20 படுக்கைகள் வசதிகளுடன் கூடிய சிறப்பு வார்டுகள் உருவாக்கப்பட்டு தற்போது திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இதில் 5 வெண்டிலேட்டர் கருவிகளுடன் ஆண்கள் வார்டில் 12 படுக்கைகளும், பெண்கள் மற்றும் குழந்தைகள் வார்டில் 8 படுக்கைகளும் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த மருத்துவமனையைப் பொறுத்தவரை 24 மணி நேரமும் அறுவை அரங்குகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை தீக்காய சிகிச்சையில் புகழ்பெற்ற மருத்துவமனையாக உள்ளது. இந்த மருத்துவமனையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு பல்வேறு வசதிகள் செய்யப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இடைநிலை பராமரிப்பு மையம் ரூ.2.36 கோடி செலவிலும், அதிர்வரை சிறுநீரக சிகிச்சை மையம் 2023 மே திங்கள் 02 ஆம் தேதி ரூ.2.30 கோடி செலவில் திறந்து வைக்கப்பட்டது.

கடந்த ஆண்டு அக்டோபர் திங்கள் 09 ஆம் தேதி ரூ.1.17 கோடி செலவில் இந்த மருத்துவமனையில் Hyperbaric Oxygen Chamber ஒன்று திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் Co2 லேசர் கருவி அதோடு மட்டுமல்லாமல் இந்த கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரியின் வரலாற்றில் ரூ.200.66 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட கட்டிடங்களும் ரூ.162.21 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட மருத்துவ உபகரணங்கள் என்று ரூ.362.86 கோடி மதிப்பீட்டில் JICA நிதி உதவியுடன் கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ரூ.18 கோடி செலவில் Hybird OT கருவி உலக அளவில் இரண்டாவதும், இந்தியாவில் முதலாவதும் ஆக நிறுவப்பட்டுள்ளது. ரூ.18 கோடி செலவில் 3 Tesla MRI கருவி 128 Slice CT போன்ற அதிநவீன கருவிகளை உள்ளடக்கிய தரை தளம் மற்றும் 6 தளங்கள் மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

ரூ.125 கோடி இம்மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், டவர் பிளாக் கட்டிடம் II இரண்டு தளங்கள் பணிகள் முடிந்து திறந்துவைக்கப்பட்டு, மேலும் கூடுதலாக 4 தளங்கள் அமைக்கப்பட்டு இறுதிகட்ட பணிகள் நடைபெறுகிறது. ரூ.1.50 கோடி செலவில் அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், குளிர்பதனக் கிடங்குடன் கூடிய பிணவறை கட்டிடம் அதுவும் இறுதி கட்ட பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ரூ.21 கோடி மதிப்பீட்டில் அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், புறநோயாளிகள் துறை கட்டிடம் மற்றும் தாய் சேய் நலம் கட்டிடம் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தநிலையில் தீபாவளி பண்டிகையின்போது பட்டாசுகள் வெடிக்கும்போது எந்த மாதிரியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்கின்ற வகையிலும், பட்டாசு வெடிக்கும்போது என்னென்ன செய்ய வேண்டும் என்கின்ற வகையில் துண்டு பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

குழந்தைகள் பெரியவர்களுடைய கண்காணிப்பில் மட்டுமே பட்டாசுகள் வெடிக்க வேண்டும் என்றும், பருத்தி ஆடைகள் அணிந்து பட்டாசு வெடிப்பது நல்லது என்றும், பட்டாசு வெடிக்கும்போது செருப்புகள் அணிந்து கொள்வது நல்லது என்றும், பட்டாசுகள் வெடிக்கும்போது ஒரு வாளி தண்ணீர் கூட வைத்திருக்க வேண்டும் என்றும், பட்டாசுகளை கொளுத்த நீண்ட மத்தாப்பு அல்லது ஊதுபத்திகளை உபயோகப்படுத்த வேண்டும் என்றும், திறந்த காற்றோட்டமான இடங்களில் பட்டாசுகளை வெடிக்க வேண்டும் என்றும், இடைவெளி விட்டு மட்டுமே பட்டாசுகளை வெடிக்க வேண்டும் என்றும் இராக்கெட் போன்ற வெடிகளை நேர்நிலையில் வைத்து தான் வெடிக்க வேண்டும் என்றும் வெடித்த பட்டாசுக்களை மண் நிறைந்த வாளியில் தான் போட வேண்டும் என்றும், பட்டு நைலான் போன்ற நீளமான துணிகளை பட்டாசு வெடிக்கும் போது தவிர்க்க வேண்டும் என்றும் இன்றைக்கு பல்வேறு அறிவுறுத்தல்கள் துறையின் சார்பில் விழிப்புணர்வாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் இன்றைக்கு புதிய சிறப்பு பிரிவு ஒன்று மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு ஒவ்வொரு தீபாவளி அன்றும், நான் சரியாக 11 மணிக்கு மருத்துவமனைக்கு வந்து தீபாவளியில் மக்களுக்காக தங்களின் குடும்பத்தினரை விட்டு பணியாற்றுகின்ற மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவம் சார்ந்த ஊழியர்கள் மற்றும் களப்பணியாளர்கள் 100க்கும் மேற்பட்ட பணியாளர்களை சந்தித்து உட்கார்ந்து அவர்களுடன் தேநீர் அருந்தி அவர்களுக்கு இனிப்புகள் வழங்கி அவர்களின் மருத்துவ சேவையை பாராட்டி செல்வது வழக்கம். அந்த வகையில் இந்த வருடம் தீபாவளி நாளில் இந்த மருத்துவமனையில் பணியாற்றுகின்ற பணியாளர்களை தீபாவளி அன்று காலை 11 மணிக்கு சந்திக்க உள்ளேன்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. சுகந்தி இராஜகுமாரி, அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.எம். கவிதா, துணை முதல்வர் மரு.செந்தில்குமாரி, நிலைய மருத்துவ அலுவலர் மரு.வாணி, தீக்காய மற்றும் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை துறைத்தலைவர் மரு.மகாதேவன் மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (16.10.2025) சென்னை அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், தீபாவளி தீக்காய சிறப்பு உள் மருத்துவ பயனாளிகள் பிரிவு தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சுகந்தி இராஜகுமாரி, அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. எம்.கவிதா, துணை முதல்வர் மரு.செந்தில்குமாரி, நிலைய மருத்துவ அலுவலர் மரு.வாணி, தீக்காய மற்றும் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை துறைத்தலைவர் மரு.மகாதேவன் மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள்,செவிலியர்கள் உடனிருந்தனர்.



காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம், பழவேரி ஊராட்சியில் பனைமர விதைகள் நடும் நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன் தொடங்கி வைத்தார். உடன் முதன்மை கல்வி அலுவலர் (பொ) திருமதி.அ.நளினி, தன்னார்வு அமைப்பினர் ஆ.வெங்கடேசன், பசுமைசரண் ஆகியோர் உள்ளனர்.